வியாழக்கிழமை, 21 டிசம்பர் 2017

# ஸ்ரீசாரதா கல்லூரியில் ரத்த தான முகாம்




ரத்த தான முகாமில் பங்கேற்றோர்.

**திருநெல்வேலி,டிச. 20:** பாளையங்கோட்டை அரியகுளம் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் ரத்த தான முகாம், ரத்தப்பிரிவு கண்டறியும் முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

திருநெல்வேலி அரசு மருத்துவமனை, கல்லூரி நாட்டுநலப் பணித் திட்டம், செஞ்சுருள் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் நடைபெற்ற இம்முகாமிற்கு அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவ அலுவலர் பூமணி தலைமை வகித்து ரத்த தானம் செய்வதன் அவசியம் குறித்துப் பேசினார்.

கல்லூரி நிர்வாகி பக்தானந்தா மகராஜ், செயலர் யதீஸ்வரி சரவண பவப் பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தார். முகாமில், 582 மாணவிகளுக்கு ரத்தப் பிரிவு கண்டறிந்து அடையாள அட்டை வழங்கப்பட்டது. 13 மாணவிகள் ரத்தம் வழங்கினர். அவர்களுக்கு சான்று வழங்கப்பட்டது. முதல்வர் மலர்விழி, பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.